| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>சந்திரா | இ.பி.எண்.10/2021 | 26.02.2024 |

1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு திருமணத்திற்கு முன்பு எனது பூர்வீகம் என்ன என்றால் தத்தமங்களம் சாலைப்பட்டியாகும். எனது கணவருக்கு பூர்வீகம் கரியமாணிக்கம், கண்ணியாக்குடியாகும். நத்தம் புறம்போக்கு, பாதை ஆகியவை தமிழக அரசுக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. மாவட்ட நிர்வாகத்தை பொருத்தவரை மாவட்ட ஆட்சித் தலைவர் தான் பொறுப்பு என்றால் எனக்கு தெரியாது. 26.10.2016 லிருந்து 16.03.2017 வரை தத்தமங்களம் ஊராட்சிக்கு மண்ணச்சநல்லூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் தான் சிறப்பு அலுவலர் என்ற முறையில் ஊராட்சி தலைவர் நிர்வாகத்தை பார்த்து வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி காலக்கட்டத்தில் தத்தமங்களம் ஊராட்சியில் ஊராட்சி தலைவர் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 16.03.2017 ல் ஒருதலைப்பட்ச தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 2016 – 2017 காலக்கட்டத்தில் ஊராட்சி தலைவர் இல்லாத நிலையில் இந்த மனுவின் 1ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்திற்கு தவறான தகவல் தெரிவித்து அசல் வழக்கில் இல்லாத 1ம் பிரதிவாதி பெயரில் தவறான தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் உரிய தரப்பினரை நான் சேர்க்காததால் இந்த தீர்ப்பானது சட்டப்படி நிறைவேற்றத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் தவறான தகவல் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். தத்தமங்களம் ஊராட்சியில் தலைவர் பொறுப்பிற்கு வந்து 2 வருடம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது.

எனது ஊரில் ஊராட்சி தலைவர் இருக்கிறாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஊராட்சி தலைவர் பெயர் எனக்கு தெரியாது. 06.01.2020 லிருந்து தத்தமங்களம் ஊராட்சியில் தலைவர் பொறுப்பில் இருந்து நிர்வாகம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் குறுந்தலைப்பில் தற்போது ஊராட்சி மன்ற தலைவர் இருக்கின்ற நிலையில் அவர் இல்லை என்றும், ஊராட்சி சார்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் என்றும் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் பகுதி தத்தமங்களம் கிராமத்தில் எந்த வார்டில் வருகிறது என்று எனக்கு தெரியாது. நீதிபேராண்மை மனு எண்.14963/2022 ல் பிரச்சனைக்குரிய பாதையை பொருத்து வருவாய் அலுவலர் மீண்டும் விசாரிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. தத்தமங்களம் கிராம புல எண்.313/1, 313/2, 313/3 ஆகியவற்றின் புல வரைபடத்தை நான் பார்க்கவில்லை. அந்த புல வரைபடத்தில் பாதைக்கான குறியீடுகள் போடப்பட்டுள்ளதை நான் பார்க்கவில்லை. நான் எந்த வருடம் தாவா பாதைக்காக பட்டா பெற்றுள்ளேன் என்றால் அது பூர்வீகமாகும். எந்த வருடம் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 18.03.2024 அன்று ஒத்தி வைக்கப்படுகிறது.